**விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், தொடர்பான தகவல்களுடனான நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.
நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்தவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் ஒரு அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான

உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது திட்டத்தின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 88 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் போது விவசாயிகளிடமிருந்து கிடைத்த தவணைப்பண வருமானத்தையும் முதலீட்டு வட்டியையும் உள்ளடக்கி கிடைத்த ரூபா 133,810,611 பணம் காலப்பகுதிக்கான வருமானமாக கணக்கீடு செய்யப்படாது திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்ததனால் அத்தொகையால் இலாபம் குறைவடைந்திருந்தது. | சபை பங்களிப்பாளர்களிடமிருந்து அறவிடுகின்ற தவணைப் பணத்தை 60 வயது பூர்த்தியடையும் போது பிரதிபலனாக செலுத்த வேண்டியுள்ளதனால் அது அறவிடப்படுகின்ற தவணைப் பணமும் அதற்குரிய வட்டிப் பணத்தினதும் மொத்த தொகையை நிதியக் கணக்கிற்கு செம்மையாக்குவதன் மூலம் எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய பொறுப்புக்களுக்காக நிதியத்தை வலுப்படுத்துதல் எதிர்பார்க்கப்பட்டது. | தவணைப் பண வருமானமும் முதலீட்டு வட்டியும் காலப்பகுதியின் வருமானமாக இனங்காணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 86,898,445,376 தொகையான ஓய்வூதிய பொறுப்பிற்காக இழப்பீட்டு கணிப்பீட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததனால் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை | 2024 பாதீட்டின் பிரகாரம் இழப்பீட்டு கணிப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த ஆண்டின் போது நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இழப்பீட்டு கணிப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ளல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் திட்டம் தொடர்பாக செலுத்திய ரூபா 10,585,145 பணம் காசு வெளிப்பாய்ச்சலாகவும் ரூபா 3,046,341,760 தொகையான முன்னைய ஆண்டு | விவசாயிகள் ஓய்வூதிய திட்டம் தொடர்பாக செலுத்தப்படுகின்ற ரூபா 10,585,145 பணிக்கொடை பணமாகும். தொழிற்படு | காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சலும் வெளிப்பாய்ச்சலும் சரியாக |

| | | |
|---|---|---|
| செம்மையாக்கல்கள் தொழிற்படு மூலதனத்தின் காசு உட்பாய்ச்சலாகவும் சபைக்காக பேணப்பட்டிருந்த நடைமுறைக்கணக்கின் ரூபா 470,320 வித்தியாசம் இரண்டு தடவையாகவும் காசுப் பாய்ச்சலுக்கு பிழையாக செம்மையாக்கப்பட்டிருந்தது. மேலும் புதிதாக நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற விவசாயிகளிடமிருந்து பெற்ற ரூபா 20,730,787 பணம் காசு உட்பாய்ச்சலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்கப்பட்டிருக்காததுடன் பணமாகத் தீர்த்துவைக்கப்பட்ட ரூபா 20,000,000 கடன் தவணைப் பணமானது காசுப் பாய்ச்சலில் காசு வெளிப்பாய்ச்சலாக பதியப்பட்டிருக்கவில்லை. | மூலதன மாற்றங்களின் மூலம் செம்மையாக்கல் இடம்பெறுவதனால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சலுக்கு தற்பொழுது செம்மையாக்கல் இடம்பெற்றுள்ளது. | செம்மையாக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திட்டத்தின் முழுச் சொத்துக்கள் ரூபா 2,202,748,150 ஆகவும் முழுப் பொறுப்புக்கள் ரூபா 89,457,327,488 ஆகவும் இருந்ததனால் சொத்துக்களை மிகைத்த பொறுப்புக்கள் ரூபா 87,254,579,339 ஆகவும் முழு நடமுறைச் சொத்துக்கள் ரூபா 1,092,503,529 மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 2,527,354,554 ஆக இருந்ததனால் நடைமுறைச் சொத்துக்களை மிகைத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 1,434,851,025 ஆக இருந்ததுடன் திறைசேரியின் பங்களிப்பு இல்லாது திட்டத்தினை பேணமுடியாத நிலைமை காணப்படுவதனால் திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருப்பது பிரச்சினைக்குரிதாக உள்ளது. | விவசாயிகள் ஓய்வூதிய பொறுப்பானது வருடாந்தம் அதிகரிப்பதுடன் திட்டத்தினுள் முதலீடு இல்லாததனால் இத்திட்டத்தின் பிரதிபலனானது தவணைப் பணத்தை அதிகரிக்காது பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக அதிகரித்ததனால் இந்த நிலைமை உருவாகியுள்ளதுடன் ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்கத்தின் பாதீட்டின் மூலம் பணத்தை ஒதுக்கீடு செய்து விவசாயிகளின் ஓய்வூதியத்தினை செலுத்துதல் மேற்கொள்ளப்படுகின்றது. | திட்டத்தினை செயற்பாடுள்ளதாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| விவசாயிகளின் சரியான ஆயுள் தரவு தகவல்களை நாளதுவரையாக்கும் நடைமுறை இல்லாமையின் காரணமாக மரணமடைந்த மற்றும் | தலைமை அலுவலகத்திற்கு கிடைகின்ற அனைத்து ஆவணங்களையும் பரீட்சித்துப் பார்த்து | உரிமை கோராத பணம் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாகப் |

| | | |
|---|---|---|
| ஏனைய காரணங்களால் உரிமை கோராத விவசாயிகளின் ஓய்வூதியம் தொடர்ச்சியாக தபால் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் போது விவசாயிகளால் பொறுப்பேற்காததனால் தபால் திணைக்களத்தினால் திருப்பி அனுப்பிய ஓய்வூதியம் ரூபா 259,373,191 தொகையாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அத்திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 81,000,602 ஆகும். ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத விவசாயிகள் தொடர்பான விபரம் பேணப்படாததனால் ஆண்டின் இறுதி மீதியினதும் பெற்ற பணத்தினதும் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | முறைப்படியாக தலைமை அலுவலகத்தின் ஏதாவதொரு இடத்தில் அல்லது ஆவணக்காப்பகத்தில் களஞ்சியப்படுத்துவதற்கும் அந்த ஆவணங்களின் தகவல்களுடன் கணனி தரவு முறைமையை நாளதுவரையாக்குதல் இடம்பெற்றுவருகின்றது எனவும் மேலும் தெரிவிக்கிறேன். மாவட்ட கணக்காளர்களால் செலுத்தாத ஓய்வூதிய ஆவணங்கள் இணைய தளத்தினூடாக எங்களுக்கு வழங்கப்படுவதுடன் அதனை முறைப்படியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பேணப்படுதல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்க மின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) **1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம்** | | | |
| (i) 6(1) ஆம் உப பிரிவு | 60 வயதினைப் பூர்த்தி செய்கையில் ஓய்வூதியத்திற்கு தகமை கிடைக்க வேண்டிய போதிலும் வயதினைப் பூர்த்திசெய்த விவசாயிகளை இனங்கண்டு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 60 வயதினைப் பூர்த்தி செய்த மற்றும் வயது பூர்த்தியடைந்து இதுவரை விவசாய ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத ஓய்வூதியக்காரர்களின் விண்ணப்பங்கள் மற்றும் உரிய அனைத்து ஆவணங்களையும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அலுவலகங்களக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | வயதினைப் பூர்த்திசெய்த நபர்களின் ஓய்வூதியத்தினை தாமதமின்றி செலுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 12(இ) பிரிவு | திட்டம் சம்பந்தமான ஆயுள் தரவுகளை உள்ளடக்கிய தகவல் முறைமை பேணப்பட்டிருந்தும் நாளதுவரையாக்கப்படாமையால் தேவையான நிதி மற்றும் செயற்பாட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்துத. | E.R.P மென்பொருள் முறைமையானது வங்கி முறைமையுடன் நேரடி தொடர்பினைப் பேணி தரவுகளை உள்ளடக்குவதற்கான இயலுமை உருவாகியுள்ளது. காணப்படுகின்ற ஊழியர் பற்றாக்குறையின் அடிப்படையில் பிந்திய தவணைப் பணங்களை கணனிமயப்படுத்துதலினை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் பிந்திய தவணைப் பணங்களை கணனிமயப்படுத்தலினை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திட்டத்தின் ஆயுள் தரவு தகவல் முறைமையை நாளதுவரையாக பேணுதல் வேண்டும். |
| (iii) | 12(ஈ) பிரிவு | திட்டம் தொடர்பான புலனாய்வு மதிப்பீடும் மீளாய்வும் மேற்கொண்டு செயற்பாட்டு விதிகளில் மாற்றங்களை ஏற்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் உருவாக்கப்பட்ட சட்டம் விதி அல்லது பிரமாணம் இல்லாது உரிமை கோரப்படாத ஓய்வூதியத்தினை மீள செலுத்தும் போது அரையாண்டிற்கு 3.32 சதவீத வட்டி தேறிய தவணைப் பணத்திற்கு மேலதிகமாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | முறைப்படியாக பங்களிப்பு பணத்தை செலுத்தாத பங்களிப்பாளர்களுக்கு தேறிய தவணைப் பணம் மற்றும் வட்டிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. என 1987 இன் 452/12 ஆம் இலக்க வர்த்தமானியின் 13 ஆம் பிரிவின் மூலம் காட்டப்பட்டுள்ளது. அக்கணிப்பீடானது புள்ளிவபர நிபுணரினால் மேற்கொள்ளப்படுகின்றது. | தேறிய தவணைப் பணத்தின் அடிப்படையில் வட்டியினை கணிப்பீடு செய்வதற்கு சட்ட விதிகள் உருவாக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | 15(1) ஆம் பிரிவு | தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை செலுத்த தவறியுள்ள பங்களிப்பாளர்களுக்கு சான்றிதழின் கீழான பிரதிபலன்களை | 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலதிட்ட அதிகாரச் சட்டத்தின் 15(1) ஆம் | தவணைப் பணங்களை முறைப்படியாக செலுத்தாததன் அடிப்படையில் பிரதிபலன்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இழக்கப்படுதலினை பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு சபைக்கு அதிகாரம் இருந்தும் நலன்பெறுனர்களினால் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை செலுத்த தவறியிருக்காத போதிலும் காலத்துக்கு காலமேனும் 05 தவணைப் பணங்களை செலுத்தாத நலன்பெறுனர்களும் உறுதியினை மீறியதாகக் கருதி ஓய்வூதிய பிரதிபலன்கள் இல்லாமல் போயிருந்தது. | பிரிவின் பிரகாரம் 05 தவணைப் பணங்களை செலுத்த தவறியுள்ள விவசாயிகளின் பிரதிபலன்கள் இழக்கப்படுகின்றது. தவணைப் பணங்களை செலுத்தும் போது கருத்தில் கொள்ளப்படுவதாவது அவர் செலுத்துகின்ற தவணைப் பணம் எப்போது செலுத்தப்படுகின்றது என்பதாகும். அதற்கிணங்க ஏதாவதொரு தவணைப் பணம் 05 தவணைகளைவிட அதாவது 2 ½ ஆண்டுகளை விட தாமதமாகுமாயின் அவரின் சான்றிதழ் உறுதியில் குறிப்பிட்ட பிரதிபலன் இல்லாமல் போகும். | இழக்கப்படுதல் பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |
| (v) | 27(1) ஆம் பிரிவு | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் மற்றும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் திட்டத்தினால் பெற்றுக்கொள்கின்ற கடனின் அளவு தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளாது கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையிடமிருந்து இத்திட்டத்திற்கு ரூபா 290,800,755 கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வட்டியையும் உள்ளடக்கி மொத்த கடன் மீதி ரூபா 518,782,124 ஆகும். | 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகளின் ஓய்வூதியத்தினை கொடுப்பனவு செய்வதற்காக திட்டத்தில் நிதி இல்லாததனால் நிதி அமைச்சரினால் வழங்கப்பட்டுள்ள சிபாரிசின் பிரகாரம் விவசாய காப்புறுதி மற்றும் கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்திடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. இக்கடன் படிப்படியாக மீளளிப்புச் செய்யப்படுகின்றது. | விடயத்திற்குப் பொறுப்பான மற்றும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் திட்டத்திற்கு கடன் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) சான்றிதழ் உறுதியின் 6 ஆம் பிரிவு | செலுத்தியுள்ள அரையாண்டு பங்களிப்பு பணத்தின் அளவில் 75 சதவீதம் கிடைத்திருக்குமாயின் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட ஓய்வூதியத்தினை விட குறைந்த ஓய்வூதியத்தினை பெற்றுக்கொள்வதற்குத் தகமை இருந்தும் அந்த பங்களிப்பாளர்களுக்கு ஓய்வூதிய பிரதிபலன்கள் இல்லாமல் ஆக்கப்பட்டிருந்தது. | குறைக்கப்பட்ட ஓய்வூயத்தினை தயாரிப்பதற்காக பங்களிப்பினை இரத்துச் செய்யாத ஒரு பங்களிப்பாளர் செலுத்த வேண்டிய தவணைப் பணத்தின் அளவில் 75 சதவீத்திற்கு மேல் கொடுப்பனவு செய்திருந்தால் அவருக்கு கழிக்கப்பட்ட ஓய்வூதியம் தயாரிக்கப்படும். | அரையாண்டு பங்களிப்பு பணத்தை பெற்றுக்கொள் ளும் தகவல்கள் முறைப்படியாக பேணப்படுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 21,428,256 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 192,873,887 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 171,445,631 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விவசாயிகளிடமிருந்து கிடைக்கின்ற தவணைப்பண வருமானம் மற்றும் முதலீட்டு வட்டி ரூபா 133,810,611 தொகை நிதிக் காலப்பகுதியின் ஒரு வருமானமாக கணக்கீடு செய்யப்படாது திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்தமை மற்றும் விவசாயிகள் ஓய்வூதிய கொடுப்பனவு அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) திட்டம் தொடர்பாக அங்கீகரித்த ஆளணியினர் இல்லாதிருந்ததுடன் சபயின் மொத்த ஊழியர் சம்பள செலவில் மற்றும் ஏனைய நிருவாக செலவுகளிலும் 50 சதவீதம் திட்டத்தின் செலவாக வரவு வைக்கப்பட்டிருந்தது. உரிமை கோரப்படாத ஓய்வூதியத்தினை மீளச் செலுத்தும் போது நலன் பெறுனர்களிடமிருந்து கிடைக்கின்ற அனைத்து தவணைப் பணங்களிலிருந்தும் ரூபா 15 சதவீதம் நிருவாகச் செலவாகவும் விவசாயி முறைப்படியாக செலுத்திய ஒரு தவணைப் பணத்திற்கு ரூபா 30 வீதம் காப்புறுதிப் | விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற விவசாயிகளுக்கு விவசாயிகள் ஓய்வூதிய அதிகாரச் சட்டத்தின் 4(ஆ), (இ) மற்றும் (ஈ) பிரிவுகளின் பிரகாரம் ஓய்வூதியத்திற்கு மேலதிகமாக மரணபணிக்கொடை மற்றும் பூரணமான அரைவாசியான பலவீனப் படி வழங்கப்படுதல் வேண்டும். வழங்கப்படுகின்ற அக்காப்புறுதிக்காக ஒரு போகத்திற்கு ரூபா 30 காப்புறுதி கட்டணம் அறவிடப்படுகின்றது. | அங்கீகரித்த ஒரு சட்டவிதி இல்லாது தவணைப் பணத்திலிருந்து வேறு அறவீடுகள் செய்யாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணமும் விவசாயிக்கு மீளச் செலுத்துகின்ற பணத்திலிருந்து ரூபா 150 மீள் காப்புறுதிக் கட்டணமாகவும் கழித்து விவசாயிக்கு மீளச் செலுத்துகின்ற பணம் தீர்மானிக்கப்பட்டிருந்தும் இதற்காக எந்த சட்ட விதியேனும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஒரு தகவல் முறைமைக்காக தரவுகளைச் சேகரிப்பதற்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 5,640,925 செலவு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்த தகவல்கள் சேகரிக்கப்படாமையால் தகவல் முறைமை கட்டியெழுப்பப்பட்டிருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் தவணைப் பண அறவீடுகளை விவசாயிகளுக்கு வழங்குகின்ற தவணைப்பண குறிப்பு புத்தகத்தில் பதிவுசெய்வதன் மூலம் அடையாளங்காணக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த தவணைப்பண குறிப்பு புத்தகங்களின் தகவல்களாக மீளாய்வின் மூலம் ஒன்றாக்கி பிரதியை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் உரிய மீளாய்வு நடவடிக்கையின் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மிகவும் சிக்கலாக இருந்ததனால் எதிர்பார்த்தவாறு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதுள்ளது. | தகவல்களை சேகரித்து உரிய முறைமையை கட்டியெழுப்பி நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். |
| (இ) | விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கூட்டு ஆயுள் காப்புறுதி நிதியத்தின் மற்றும் அது தொடர்பான முதலீடாகிய ரூபா 251,547,146 மீதி கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. திட்டத்தின் நிதித் தேவைப்பாட்டிற்காக 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது கூட்டு ஆயுள் காப்புறுதி | காப்புறுதி தவணைப் பணத்தினை சேகரித்தல், நிதியத்தை கட்டியெழுப்புதல், கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் விவசாய காப்புறுதி திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது இந்த ஆயுள் காப்புறுதியானது இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அதன் போது ஒரு விவசாயிக்கான பங்களிப்பு பணம் ரூபா 60 வீதம் அந்த நிறுவனத்திற்குச் | திட்டத்திற்கு பொருளாதார நலன் கிடைக்கும் வகையில் சரியான தீர்மானம் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்திலிருந்து ரூபா 295,230,442 கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த துடன் அதற்காக 2023 ஆம் ஆண்டு வரையான திரண்ட வட்டி ரூபா 422,547,571 ஆகும். மீளாய்வாண்டில் திட்டத்தின் நிருவாகச் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து பெற்ற ரூபா 206,225,000 பணத்தில் ரூபா 7,980,276 தொகையும் விவசாயிகளிடமிருந்து பெற்ற தவணைப் பண வருமானத்தில் ரூபா 20,000,000 இனையும் பயன்படுத்தி கடன் பணத்தின் ஒரு பகுதியாக தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க ஆயுள் காப்புறுதி நிதியத்தின் முதலீடு ஒரு கடனாக மாற்றப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்டது. 1994 ஆம் ஆண்டின் போது அந்த ஆயுள் காப்புறுதி ஆபத்தினை சபையினால் வகிப்பதற்கு பொறுப்பேற்று அந்த நிதியம் சபையில் கட்டியெழுப்பப்பட்டது. அதன் போது உச்ச அளவான உள்ளடக்கம் ரூபா 50,000 என்பதனால் எதிர்பாராத நிலைமை உருவாகுமாயின் அதிக அளவு இழப்பீட்டுப் பணத்தை விடுவிக்க வேண்டிய சந்தர்ப்பம் காணப்பட்டது. இழப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது வழங்கப்படுகின்ற அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | மாவிலாறு வான் கதவு மூடப்பட்டதனால் விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை நட்டத்திற்கு இழப்பீடு செலுத்துவதற்காக ரூபா 07 மில்லியனுக்கு மேற்பட்ட பணம் முன்னைய ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக தொடுக்கப்பட்ட வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக 2007 நவம்பர் 30 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் இவ்வறிக்கைத் திகதி வரை அது சம்பந்தமாக எந்த பின்தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | தொடுக்கப்பட்ட வழக்கு சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2012 ஆம் ஆண்டிலிருந்து உரிமை கோரப்படாத செலுத்த வேண்டிய ரூபா 4,254,932,613 மீதியில் ரூபா 3,033,329,200 பணத்தை உரிய விவசாயிகளுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றியதனால் நிதியத்தில் பாதகமான நிலைமை குறைவடைந்திருந்தது. | 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காகச் செலுத்த வேண்டிய ஓய்வூதியமான ரூபா 3,033,329,200 பெறுமதியினை பதிவழிப்பதற்காக 535/04 ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | விவசாயிகள் உரிமை கோராத ஓய்வூதியத்தினை ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திட்டத்தில் பதிவு செய்துள்ள 871,425 விவசாயிகளிடமிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 61 வயதிலிருந்து 93 வயது வரை வயதாகியுள்ள விவசாயிகள் 474,803 ஆக இருந்த போதிலும் அவர்களில் 264,227 நபர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டின் போது 60 வயதினைப் பூர்த்திசெய்த ஓய்வூதியத்திற்கு தகமைபெற வேண்டிய விண்ணப்ப படிவங்களை அனுப்பியிருக்காத பங்களிப்பாளர்களைத் தேடிப்பார்த்து ஓய்வூதியத்தினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து மாவட்ட பிரதி/ உதவிப் பணிப்பாளர்களக்கு 2023 யூன் 23 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்ட 6/FPS/பா/2 ஆம் இலக்க கடித்தின் மூலம் தெரியப்படுத்தியிருந்தும் 12 மாவட்ட அலுவலகங்களின் தெரிவுப் பரீட்சிப்பின் போது அவற்றில் 06 அலுவலகங்கள் இதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | 60 வயது பூர்த்தியடைந்து இதுவரை ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளாத விவசாயிகள் தற்பொழுது தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து மாவட்ட அலுவலகங்களின் பணிப்பாளர்களும் இந்த நடவடிக்கையானது முன்னுரிமை செயற்பாடாகக் கருதி நடவடிக்கை எடுத்துள்ளனர். | 60 வயதினைப் பூர்த்திசெய்த ஓய்வூதியத்திற்கு வேண்டிக்கொள்ளாத பங்களிப்பாளர்களை அடையாளங்காண்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை செலத்த தவறுகையில் அது பற்றி தெரியப்படுத்தி உறுதியினை செயற்படுத்துவதற்காக தேவையான வவசதிகள் வழங்கப்படாததனால் நிர்ணயிக்கப்பட்ட வயது பூர்த்தியடைந்ததன் பின்னர் ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்த | உரிய முறைப்படி பங்களிப்பு பணத்தை செலுத்தாத பங்களிப்பாளர்களுக்கு தேறிய தவணைப்பணம் மற்றும் வட்டிக் கொடுப்பனவினை மேற்கொள்ளுமாறு 2014 இன் 452/12 ஆம் இலக்க வர்த்தமானியின் 13 ஆவது கட்டளையின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய விவசாயிகளுக்கு தேறிய | தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை செலுத்த தவறுகையில் அது பற்றி தெரியப்படுத்தி உறுதியினை செயற்படுத்துவதற்காக தேவையான வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்பாளர்களில் 2021 ஆம் ஆண்டின் போது 1127 பங்களிப்பாளர்களுக்கும் 2022 ஆம் ஆண்டின் போது 2226 பங்களிப்பாளர்களுக்கும் மீளாய்வாண்டில் 715 பங்களிப்பாளர்களுக்கும் ஓய்வூதியம் செலுத்தப்படாது தேறிய தவணைப் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தவணைப்பண கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என கூட்டிக்காட்டுகிறேன். | |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் பின்னர் அங்கத்தவர்களைச் சேர்க்கும் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | தவணைப் பணங்களை செலுத்த தவறி உறுதிப்பத்திரம் செயறபாடற்றுள்ள விவசாயிகளை அடையாளங்கண்டு அவர்களின் தணைப்பணத்தை பொறுப்பேற்காத வகையில் அக்கணக்கினை இடைநிறுத்துவதற்கான நடைமுறை அறிமுகப்படுத்தாதுள்ளமை. | பங்களிப்பாளர்களின் பிந்திய தவவவைணப்பண அறவீடுகளை பரீட்சிப்பது சம்பந்தமாக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>• வங்கி நிலையான கட்டளைகளின் மூலம் பெற்றுக்கொள்ளும் தவணைப் பணங்கள் தொடர்பாக அறிக்கையை பேணுதல் வேண்டும்.<br>• SMS மூலமாக தவணைப் பணத்தை செலத்துமாறு பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2023 ஒக்தோபர் முதலாது போகத்தின் போது உங்களின் விவசாய ஓய்வூதிய தவணைப் பணத்தை நிரந்தர கட்டளைகளின் மூலம் செலுத்தும் போது உறுதிப்பத்திர இலக்கம் சபைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது என்பதனை வங்கியின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு SMS செய்தியின் மூலம் தவணைப்பணத்தை தவணைப் பணத்தை | உறுதிப்பத்திரத்தினை மீறுவதனை அடையாளங்காண்பதற்கான நடைமுறை அறிமுப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்தத் தவறுவதனை தவிர்த்துக் கொள்வதற்காக தெரியப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br><br>எதிர்காலத்தில் 1918 சேவையின் மூலம் பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தலினை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | |
| (ii) | 2023 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் வினைத்திறனை அதிகரித்தல் என்ற தந்திரோபாயத்தின் கீழ் திட்டமிட்ட 03 செயற்பாடுகளின் பிரகாரம் பங்களிப்பாளர்களை செயற்பாடாக பேணுவதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படாமை குறுந்தகவல் (SMS) மூலம் தெரியப்படுத்துதல் மற்றும் கணக்கு மீதியை பரீட்சிப்பதற்காக இணைய தள உள்ளீட்டினை அறிமுகப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்காமை. | SMS மூலம் தவணைப் பணத்தினை செலுத்துதலினை தெரியப்படுத்ததல் மற்றும் பங்பளிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய தொழில்நுட்ப நடவடிக்கைகள் தற்பொழுது முடிவடைந்துள்ளது. அதன் போது தொழில்நுட்ப நடவடிக்கைகளை முடிவுறுத்தியதன் பின்னர் தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு வழங்கப்படுகின்ற SMS தகவல்களை பங்களிப்பாளர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பங்களிப்பாளர்களை செயற்பாடாக பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | போட்டி காப்புறுதி நிறுவனங்களினால் தவணைப் பண கொடுப்பனவு மற்றும் தாமதித்தல் தொடர்பாக பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துதலினை மேற்கொண்டு அவர்களக்கு வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்ற போதிலும் சபையினால் ஒரு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்காமை. | முகவர் இணையத்தின் மூலம் பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துதல் மேலதிக கிரயத்தினை ஏற்படுத்தும் என்பதனால் SMS தகவல் முறைமையை பயன்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொழிலில் காணப்படுகின்ற மேம்படுத்தல் நிலைமையை பின்பற்றுதல் வேண்டும். |